**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.239/2023**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகேசன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : செல்லப்பகவுண்டர் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : ஓடைப்பட்டி | வயது | : சுமார் 65 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 18.08.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஓடைப்பட்டி கிராமம், ஓடைப்பட்டி அஞ்சல், கொங்கப்பட்டியில் வசித்து வரும் செல்லப்பகவுண்டர் மகன் சுமார் 65 வயதுள்ள முருகேசன் ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 03.02.2022 | வாதியிடம் V.பழனிச்சாமி கடனாக ரொக்கம் ரூ.2,50,000 பெற்றுக் கொண்டு வாதியின் பெயருக்கு எழுதிக் கொடுத்துள்ள தாவா கடனுறுதிசீட்டு – அசல் | வா.சா.ஆ.1 |

| | | | |
|---|---|---|---|
| 02 | 25.02.2023 | வாதி தனது வழக்குரைஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கு முன்னறிவிப்பு – அலுவலக நகல் | வா.சா.ஆ.2 |
| 03 | 06.03.2023 | வழக்குரைஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை (2 எண்ணிக்கைகள்) – அசல் | வா.சா.ஆ.3 |
| 04 | 09.03.2023 | பிரதிவாதிகள் தங்களது வழக்குரைஞர் மூலம் வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு – சார்வு நகல் | வா.சா.ஆ.4 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.08.18 19:17:46 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்